

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், பிள்ளைபாளையம் ஊராட்சியில் பிள்ளைப்பாளையம்– கொல்லாபுரம் ரேஷன் கடை வரை 0/0 – 1/200 சாலை அமைக்கும் பணியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றியம், கீழ்வேளூர் பேரூர் சார்பில் இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா தலைமையில் நடைபெற்றது. முகாமை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தொடங்கி வைத்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், கீழ்வேளூர் பேரூர் செயலாளர் கா.அட்சயலிங்கம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.என்.கார்த்தி, துணை அமைப்பாளர் சுரேஷ், சுற்றுச்சூழல் அணி மாவட்ட தலைவர் ஏ.எஸ்.என்.ராஜா மற்றும் ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் உள்ளனர்.

### ‘பசுமைப் புரட்சியின் தந்தை’ வேளாண் அறிவியலாளர்

# எம்.எஸ்.சுவாமிநாதன் மறைவு - அறிவியல் துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, செப். 30-**

**வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில், “பசுமைப் புரட்சியின் தந்தை – வேளாண் துறை விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் மறைவுக்கு அறிவியல் துறைக்கும், தமிழ்நாட்டுக்கும் ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

பசிப்பிணி ஒழிப்பு உணவுப் பாதுகாப்பு என்ற இரு குறிக்கோள்களுக்காகக் கடந்த முக்கால் நூற்றாண்டு காலம் அரும்பணி ஆற்றி வந்த தலைசிறந்த வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன்.

நீடித்து நிலைத்த உணவுப் பாதுகாப்புக்காக ஆற்றிய பங்களிப்புகளுக்காக பசுமைப் புரட்சியின் தந்தை எனப் பரவலாகப் போற்றப்படும் சுவாமிநாதன் அவர்கள் உலக அரிசி ஆராய்ச்சி நிறுவனம் (IRRI), இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) முதலிய பல்வேறு பன்னாட்டு மற்றும் அரசு ஆராய்ச்சி நிறுவனங்களின் உயர் பொறுப்புகளில் பணியாற்றிய சிறப்புக்குரியவர்



ஆவார். ஒன்றிய வேளாண் அமைச்சகத்தின் முதன்மைச் செயலாளராக இருந்த அவர் பின்னர் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

சமூகத் தலைமைக்கான ராமன் மகசேசே விருது, பத்ம ஸ்ரீ, பத்ம பூசண், பத்ம விபூசண் உள்ளிட்ட பல உயரிய விருதுகளை வென்ற சுவாமிநாதன் அவர்கள், இருபதாம் நூற்றாண்டில் மிகப் பெரும் தாக்கம் செலுத்திய ஆசிய ஆளுமைகள் என உலகப் புகழ் பெற்ற “டைம்” இதழ் வெளியிட்ட பட்டியலில் மகாத்மா காந்தி, இரவீந்திரநாத் தாகூர் ஆகியோருடன் இடம்பெற்ற இந்தியர் ஆவார்.

நாடு போற்றும் விஞ்ஞானியாக சுற்றுச்சூழல் வேளாண்மைத்துறையில் அளப்பரிய பங்காற்றிய சுவாமிநாதன் அவர்கள் 1989-91, 1996-2000 ஆகிய ஆண்டுகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மாநிலத் திட்டக் குழுவிலும் இடம்பெற்று சீரிய ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

தலைவர் கலைஞருடனும், என்னுடனும் எப்போதும் நல்ல நட்பைப் பேணி வந்தார். 1989ஆம் ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் சுவாமிநாதன் அவர்கள் கோரிக்கை வைத்ததும், தரமணியில் அவர் நிலம் வழங்கிய இடத்தில்தான் கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக, ‘எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்’ செயல்பட்டு வருகிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அந்நிறுவனத்தின் 32ஆவது ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றி, 96 ஆவது பிறந்தநாள் காணவிருக்கும் சுவாமிநாதன் அவர்கள் நூறாண்டு வாழ்க என வாழ்த்தியது தற்போது என் நெஞ்சில் நிழலாடுகிறது.

அவரது இழப்பு அறிவியல் துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும்.

மிகப்பெரும் ஆளுமையை இழந்து தவிக்கும் அறிவியல் உலகினருக்கும் அவரது குடும்பத்தார்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### விழுப்புரத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பட்டிமன்றம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவிப்பு!

*சென்னை, செப். 30-*

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பட்டிமன்றம், விழுப்புரம், கலைஞர் அறிவாலயத்தில், 01-10-2023 அன்று காலை 9.00 மணிக்கு ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையில் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளை பெற்றுத்தந்தது டாக்டர் கலைஞரின் அரசியல் பணியா? கலை இலக்கிய பணியா? தலைப்பில் பட்டிமன்ற நடுவர் திண்டுக்கல் ஐ.லியோனி தலைமையில் மாபெரும் பட்டிமன்றம் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., பொன்.கௌதமசிகாமணி எம்.பி., ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி பட்டிமன்றத்தைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார். கழக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர். செல்வராஜ் எம்.பி., சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மற்றும் வேளாண்மை (ம) உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, கழக சிறுபான்மையினர் நலக்குழு செயலாளர் ர.சுபேதார்கான் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் செ.புஷ்பராஜ் மற்றும் மருதூர் ஏ.இராமலிங்கம் ஆகியோர் மேற்கொள்ள, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் வி.பி.இராசன், திப்பம்பட்டி ஆறுசாமி, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்கள் எஸ்.மாரியப்பன் கென்னடி, பி.துரைசாமி, மு.பொன்தோஸ், சா.இராஜேந்திரன், சி.தசரதன், மு.பரமானந்தம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு முன்பாக விழுப்புரம் பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள டாக்டர். அம்பேத்கர் திருவுருவ சிலை. கலைஞர் அறிவாலயத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை மற்றும் பேரறிஞர் அண்ணா சிலைக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் க. பொன்முடி மாலை அணிவிக்கின்றார்.

# திருவாரூரில் பல்லுயிர் பாதுகாப்பு பசுமையாக்குதலின் கீழ் மரம் நடும் விழா!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*திருவாரூர்,செப். 30-*

*திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டம், மத்திய பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் கீழ் மரம் நடும் நாள் மற்றும் தமிழ்நாடு அரசினால் வனத்துறையில் தமிழ்நாடு பசுமை இயக்கம் தொடக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைவதை முன்னிட்டு பசுமை தமிழ்நாடு நாள் ஆகியவற்றை கொண்டாடும் விதமாக கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் விவசாய நிலங்களில் 25000 மரக்கன்றுகள் நடும் விழாவை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஶ்ரீ மற்றும் துணைவேந்தர் கிருஷ்ணன் மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தனர்.*

*தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களோடு நடைபெற்ற இந்த விழா மரங்கள் மற்றும் காட்டின் முக்கியத்துவத்தை பேணுவதோடு மரம் நடுதலை ஊக்குவிக்கும் வகையில் காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் கீழ் மரம் நடும் நாள் மற்றும் தமிழ்நாடு அரசினால் வனத்துறையில் தமிழ்நாடு பசுமை இயக்கம் தொடக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைவதை முன்னிட்டு பசுமை தமிழ்நாடு நாள் ஆகியவற்றை கொண்டாடும் விதமாக தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் 25000 “மரக்கன்றுகள் நடும் விழா”, பொதுமக்கள், விவசாயிகள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களின் பங்கேற்புடன் இயற்கையோடு இயைந்து கொண்டாட ஆணை வரப்பெற்றதன் அதனடிப்படையில், திருவாரூர் மாவட்டத்தில், மத்திய பல்கலைக்கழக வளாகத்தில் முதற்கட்டமாக 700 மரக்கன்றுகள் மத்திய பல்கலைக்கழக மாணவ, மாணவியர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்களின், நேரடி பங்களிப்போடு மரங்கன்றுகள் நடுவதை ஊக்குவிக்கும் விதமாக அவர்களை வைத்து மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும், மாவட்டத்தில் சம்மந்தபட்ட துறைகளின் மூலம் மரக்கன்றுகள் பள்ளி, கல்லூரிகளிலும், விவசாயிகளின் நிலங்களிலும் மழைக்காலம் வருவதற்கு முன்கூட்டியே நடப்படவுள்ளது.*

*மேலும், மாணவ, மாணவிகளுக்கும், பொதுமக்களுக்கும் மரக்கன்றுகள் நடவு குறித்த விழிப்புணர்வு கையேடு, இயற்கைக்கு ஊறு விளைவிக்கும் நெகிழி பொருட்கள் பயன்பாட்டினை தவிர்த்து சுற்றுச் சூழலுக்கு கேடு விளைவிக்காத வகையில் உருவாக்கப்பட்ட துணியினால் உருவாக்கப்பட்ட பைகள் மற்றும் பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஶ்ரீயும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணனும் வழங்கினார்கள்.*

*இந்நிகழ்வில், மாவட்ட ஒன்றியக்குழு துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், நகர்மன்ற தலைவர் புவனபிரியா செந்தில், துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் மீனாட்சி சூர்யபிரகாஷ் ,ஊராட்சி மன்றத்தலைவர் ஐயப்பன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், மத்திய பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர்கள் கலந்து கொண்டனர்.*

### குன்னம் சி. இராஜேந்திரன் தலைமையில்

# பெரம்பலூர் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ஆலோசனைக் கூட்டம்!

## எம். பிரபாகரன் எம்.எல்.ஏ. - முன்னணியினர் பங்கேற்பு!

*பெரம்பலூர்,செப்.30 -*

*பெரம்பலூர் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ஆலோசனைக் கூட்டம், மாவட்டக் கழக அலுவலகத்தில்,*

*மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது.*

*இந்த கூட்டத்தில், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தரராசு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், கலை இலக்கியப் பேரவை மாவட்ட அமைப்பாளர் முத்தரசன், கலை இலக்கிய பேரவை மாவட்ட துணை தலைவர் ரமேஷ்,*

*கலை இலக்கிய பேரவை மாவட்ட துணை அமைப்பாளர்கள் ந.முத்து செல்வம்,பூபதி, சின்னதுரை, தென்றல் ரவி, கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

*இந்த கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.*

*வருகிற 22.10 .2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணி அளவில் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி நடத்துவது எனவும், தலைவர் கலைஞர் அவர்களின் சிறந்த வசனங்கள் சிறந்த திரைப்படங்களை மாவட்டம் முழுவதும் ஒளிபரப்புவது எனவும்,*

*வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ், பரிசுத்தொகை வழங்குவது எனவும்,*

*வெற்றி பெறும் முதல் மூன்று மணவ,மாணவியர்களை மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க செய்வது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.*



பெரம்பலூர் மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 400 கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழாவினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம் தலைமையில் நடத்தி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, டாக்டர் செ.வல்லபன், வி.எஸ்.பெரியசாமி, மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மு.சா.பரத்குமார் தாயார் மறைவு!

*சென்னை, செப்.30-*

*சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி 110 ‘அ’ வட்ட துணைச் செயலாளர் மு.சா. பரத்குமார் மற்றும் ஆர். கே.நகர் கிழக்குப் பகுதி 41-வது வட்ட துணைச் செயலாளர் மு.சா.அரித்குமார் ஆகியோரின் தாயாரும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் ஒன்றியம் மடையம்பாக்கம் தி.மு.க. முன்னாள் கிளைச் செயலாளர் மு.சாம்பசிவத்தின் மனைவியுமான சா.புவனேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் 28.9.2023 இரவு 7 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

# தி.மு.க. மகளிரணி, மகளிர் தொண்டரணி புதிய மாவட்ட நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## அணியின் செயலாளர்கள் ஹெலன் டேவிட்சன், நாமக்கல் இராணி அறிவிப்பு!

தி.மு.க மகளிரணி, மகளிர் தொண்டரணி புதிய மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம் 07-10-2023 அன்று (சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் கழக துணை பொது செயலாளர் திருமிகு. கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெறுகிறது.

இக்கட்டத்தில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரையாற்றுகிறார். பள்ளி கல்விதுறை அமைச்சர் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மற்றும் தியாகராஜன் எம்.எல்.ஏ., திருச்சி (வடக்கு மாவட்ட கழக செயலாளர்,) திருச்சி மத்திய மாவட்ட கழக செயலாளர் வைரமணி, திருச்சி மாநகர மேயர், திருச்சி மேற்கு மாநகர செயலாளர் அன்பழகன், மு. மதிவாணன், மாநகர கழக செயலாளர் (கிழக்கு) மண்டலம் தலைவர் திருச்சி மாநகராட்சி அனைவரின் முன்னிலையில் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து மாநில நிர்வாகிகள், மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, வலைதளக்குழு, ஆலோசனைக் குழு உறுப்பினர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் முரசொலியில் அறிவித்த புதிய மாவட்ட நிர்வாகிகள், அனைவரும் கூட்டத்தில் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**ஹெலன் டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிரணி

**நாமக்கல் இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டரணி